அளித்திருக்கிறது. மற்ற இரு பத்திரிகைகளும் அவகாசம் கேட்டுக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். எனவே, 20—7—1977 வரை அவற்றுக்கு அவகாசம் கொடுத்துவிட்டு, இவற்றின் மீது எனது தீர்ப்பை அடுத்த கூட்டத் தொடரில் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சுப்பு அவர்கள் எழுப்பிய அவை உரிமை மீறல் தீர்மானத்தின் மீதும் எனது தீர்ப்பை அடுத்த கூட்டத் தொடரில் அறிவிக்கிறேன்.

(3) அரசினர் தீர்மானம்.

பேரவை விதி 41(3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"சட்டமன்றப் பேரவையின் 244-வது விதியின் கீழ் 41-வது விதி மூன்றாவது உட்பிரிவின்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக் கூடாது என்பதை இன்று தளர்த்த வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(4) கவன ஈர்ப்பு

(அ) மூன்றாவது ஊதியக்குழு அமைப்பது குறித்து

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ்—

"மூன்றாவது ஊதியக் குழு அமைப்பதாக தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்றாவிடில் நேரடி நடவடிக்கையாக மீண்டும் கிளர்ச்சியைத் தொடங்கப் போவதாக அரசு ஊழியர்கள் கொடுத்துள்ள இறுதி எச்சரிக்கையின் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து" என்ற

அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.